THE HINDU TAMIL

9 AUG 2023

PAGE 5

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# முதுகலை பட்டப் படிப்புகளுக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி நாள்

**புதுச்சேரி**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்புகள் மற்றும் முதுகலை பட்டயப் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் நாளை (ஆக.10) வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வு (கியூட் - பிஜி) தேர்வு முடிவுகளின் அடிப்படையில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு முதுகலை படிப்புகள் மற்றும் முதுகலை பட்டயப் படிப்புகளில் சேர்வதற்கான ஆன்லைன் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் ஆகஸ்ட் 10-ம் தேதி (நாளை) வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்னதாக பதிவு செய்து முடிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கும், புதிதாக விண்ணப்பிக்கவிரும்பும்விண்ணப்பதாரர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு தேவையான கியூட் (பிஜி) 2023-ல் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள், 2023-24-ம் கல்வியாண்டில் வழங்கப்படும் பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டயப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு, 'https://www.pondiuni.edu.in/admissions-2023-24/' என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். முதுகலை பட்டப்படிப்புக்கான தகுதி அளவுகோல்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டை பார்வையிடலாம். மேலும், தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINA THANTHI

9 AUG 2023

PAGE 10

### மத்திய பல்கலைக்கழக தரவரிசையில்

# புதுச்சேரிக்கு 4-வது இடம்

புதுச்சேரி, ஆக.9-

மத்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த தரவரிசை பட்டியலில் முதல் 20 இடங்களுக்குள் உள்ள பல்கலைக்கழகங்களில் 4-வது இடத்தை புதுவை மத்திய பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

கல்வி, ஆய்வு, வேலைவாய்ப்பு, அடிப்படை கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு விதமான அளவீடுகளில் 1,000 புள்ளிகளுக்கு 889.62 புள்ளிகளை பெற்றுள்ளது. கடந்த ஆண்டு 887.46 புள்ளிகளை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

THE TIMES OF INDIA

9 AUG 2023

PAGE 7

AROUND THE STATE IN 80 WORDS

# Pondy univ extends admission deadline

Pondicherry University has extended the last date up to August 10 for submitting online application forms for admission into various postgraduate degree and postgraduate diploma courses for the academic year 2023-24 based on the Common university entrance test (CUET) (PG) 2023. The candidates, who could not complete their registration earlier and fresh candidates can apply online, said a release from the university. The candidates can visit university's website https://www.pondiuni.edu.in/admissions-2023-24/ to apply online.

DINAMALAR

9 AUG 2023

PAGE 1

# தரவரிசை பட்டியலில் 4ம் இடம் புதுச்சேரி பல்கலைக்கழகம் அசத்தல்

**புதுச்சேரி, ஆக. 9–**

மத்திய பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் புதுச்சேரி பல்கலைக்கழகம் 4ம் இடத்தை பிடித்து அசத்தியுள்ளது.

நாடு முழுவதும் சிறந்த கல்வி நிறுவனங்களை தேர்வு செய்து 'அவுட்லுக்– ஐகேர்' தரவரிசை பட்டியல் வெளியிட்டு வருகிறது.

அண்மையில் வெளியிடப்பட்ட 'அவுட்லுக்– ஐகேர் 2023' மத்திய பல்கலைக் கழக தரவரிசை பட்டியலில், புதுச்சேரி பல்கலை., 1000ற்கு 889.62 புள்ளிகள் பெற்று 4ம் இடத்தை பிடித்து அசத்தியுள்ளது. இது கடந்தாண்டைவிட 2.16 புள்ளிகள் கூடுதலாகும்.

கல்வி ஆராய்ச்சி – 378.54, வேலைவாய்ப்பு – 173.87, உள்கட்டமைப்பு – 136.3, நிர்வாகம் – 127.45, புற தொடர்பு–73.46 புள்ளிகள் பெற்றுள்ளது.

துணைவேந்தர் குர்மீத் சிங், பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் என அனைவரது ஒத்துழைப்பினால், அவுட்லுக் பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் 4–வது பிடித்துள்ளது.

தொடர்ந்து அனைவரது முயற்சினால், உயர் கல்வியில் உயர்ந்த நிலை எட்டிபிடிக்கும் என தெரிவித்துள்ளது.

DINAMANI

9 AUG 2023

PAGE 3

# புதுச்சேரி பல்கலை. முதுநிலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி நாள்

**புதுச்சேரி, ஆக. 8:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டப்படிப்புகள் மற்றும் முதுநிலை டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 10-ஆம் தேதி வியாழக்கிழமை வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுவை பல்கலைக்கழகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: பல்கலைக்கழகப் பொது நுழைவுத் தேர்வு (கியூட், பிஜி) தேர்வு முடிவுகளின் அடிப்படையில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு முதுநிலை படிப்புகள் மற்றும் முதுநிலை டிப்ளமோ படிப்புகளில் சேருவதற்கான இணையதள விண்ணப்ப படிவத்தை வழங்குவதற்கு வரும் வியாழக்கிழமை (ஆக. 1) வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

புதுவை பல்கலைக்கழகத்துக்கு தேவையான கியூட் (பிஜி) 2023-இல் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் 2023-24-ஆம் கல்வியாண்டில் வழங்கப்படும் பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை பட்டயப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

முதுநிலை பட்டப்படிப்புக்கான தகுதி அளவுகோல்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டை பார்க்கவேண்டும். விண்ணப்பம் சார்ந்த சமீபத்திய தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்க்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.